செ.கு.எண் 196 நாள் 27-05-12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 27.5.2012

20.5.2012 அன்று வேலூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், குளித்திகை கிராமம் நான்கு வழி தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த டிராக்டர் ஒன்றின் மீது அரசுப் பேருந்து மோதியதில், கொல்லமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த டிராக்டர் ஓட்டுநர் திரு. பார்த்திபன் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் அகால மரணமடைந்த பார்த்திபன் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இவ்விபத்தில் காலமான திரு. பார்த்திபன் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9